நீதிமன்ற படிவ எண்.53

(விதி 42ஐ காண்க)

<u>சாட்சியின் சான்றுரை</u>

(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.

**SC No.62/2023**

**(Split up Case No. 35/2025)**

**<u>அ.சா.1 சாட்சியின் சான்றுரை</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமரேஷ் | வயது | : | 40/2026 |
| த/பெ. | : | K.P.தங்கராஜன் | தொழில் | : | காவல் ஆய்வாளர், B1 Bazar Investigation wing |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | தாலுகா, மாவட்டம் | : | கோயம்புத்தூர் |

**<u>03.06.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>**

**எதிரி காணொளி மூலம் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை</u>** :

நான் தற்போது கோவை மாநகரம் பஜார் காவல் நிலைய புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நான் ஈரோடு வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 26/7/2022–ம் தேதி மாலை 4:00 மணிக்கு நிலைய அலுவலகத்தில் இருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் ஈரோடு வடக்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மாணிக்கம் பாளையம், முனியப்பன் கோவில் தெரு, கதவு எண் 326 இல் வசிக்கும் முகமது மகபூப் அலி என்பவரின் மகன் ஆசிப் அலி என்கிற ஆசிப் முஸ்தகின் என்பவரின் நடவடிக்கை குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ள வேண்டி அந்தப் பகுதியில் உள்ள ஒரு நபரை விசாரணை மேற்கொண்டதில் அவர் தனது பெயர் விலாசத்தை கூற மறுத்தும் ஆசிப் என்கிற ஆசிப் முஸ்தகின் என்பவர் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும் அவர் ஈராக் மற்றும் சிரியாவை தலைமை இடமாகக் கொண்ட தடை செய்யப்பட்ட இயக்கமான ஐஎஸ்ஐஎஸ் என்ற இயக்கத்தில் இணைந்திருந்ததாகவும் அதற்காக அவரது செல்போனில் டெலகிராம் என்ற அப்ளிகேஷன் மூலம் அந்த இயக்கத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி வருவதாகவும் இந்தியா மற்றும் அதன் நட்பு நாடுகளில் உள்ள முஸ்லிம்களை அந்த அமைப்பில் இணைத்துக் கொண்டு அதன் மூலம் கலவரத்தை ஏற்படுத்தி இந்தியா மற்றும் இந்தியாவின் நட்பு நாடுகளை முஸ்லிம் நாடாக மாற்ற வேண்டும் என்றும் அதற்காக ஈரோடு காவல்துறையை சேர்ந்த ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்றும் முஸ்லிம் அல்லாதவர்களை பயமுறுத்தும் வகையில் அவர்களின் வீடுகளை வெடிகுண்டு வைத்து தகர்க்க வேண்டும் என்றும் அதற்காக கூட்டு சதி செய்து திட்டமிட்டு இருப்பதாகவும் அதற்காக கொடியையும் கத்திகளையும் தயார் செய்து தனது

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.03 16:59:31 +0530

வீட்டில் வைத்து இருப்பதாகவும் சொன்னார். எனவே ஆசிப் என்கின்ற ஆசிப் முஸ்தகின் ஐஎஸ்ஐஎஸ் இயக்கத்தின் உறுப்பினர் என்பதும் அந்த தீவிரவாத அமைப்பிற்காக கூட்டு சதி செய்து இந்தியா மற்றும் அதன் நட்புறவு நாடுகளில் தீவிரவாத செயல்களை செய்ய திட்டமிட்டு இருப்பதால் நான் காவல் நிலையம் வந்து ஆசிப் என்கின்ற ஆசிப் முஸ்தகின் மீது நடவடிக்கை எடுக்கும்படி எழுத்து மூலமாக புகாரை 26.07.2022–ம் தேதி 18. 30 மணிக்கு ஈரோடு வடக்கு காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் அ.த.சா.ஆ.1** ஆகும். (அ.த.சா.ஆ.1 எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) நான் கொடுத்த புகாரின் பேரில் காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக ஈரோடு காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

26.07.2022 ஆம் தேதி காவல் நிலையத்தில் உள்ள நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் காவல் ஆய்வாளர் சண்முகம் ஆகும். அந்த தேதியில் நிலையத்தில் இருந்த ரைட்டர் யார் என்றால் அது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை காவல்துறையில் சட்டம் ஒழுங்கு தவிர நக்சல் அமைப்புகள், தீவிரவாத அமைப்புகள் ஆகியவற்றை கண்காணிக்க தனி துறை உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஒரு புலன் கொள்ளத்தக்க குற்றம் (cognizable offence) நடைபெற்றால் என்ன செய்யப்படும் என்றால் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்யப்படும். புகார் போன் மூலமோ, மெசேஜ் மூலமோ, மின்னணு சாதனம் மூலமோ கிடைக்கப்பெற்றால் என்ன செய்யப்படும் என்றால் அந்த தகவல் உறுதி செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்படும். நான் காவல் நிலைய ஆணைகளில் பயிற்சி பெற்றுள்ளேன். ஒரு புலன் கொள்ளத்தக்க குற்றம் (cognizable offence) நடைபெற்று அது போன் மூலமோ, மின்னணு சாதனம் மூலமோ நிலையத்திற்கு தகவல் கிடைத்தால் அதை ஜெனரல் டைரியில் என்ட்ரி போட வேண்டும் என்றால் சரிதான். ஒரு cognizable offence நடைபெற்று அதை ஜெனரல் டைரியில் என்ட்ரி பதிவு செய்யப்பட்டால் அந்த ஜிடி என்ட்ரியின் அடிப்படையில் நேரடியாக புலன் விசாரணை நடத்தலாம் என்றாலும் தனியாக ஒரு புகார் அளிக்க தேவை இல்லை என்று சொன்னாலும் சரிதான். UAPA 2008 Act – ல் நான் பயிற்சி பெற்றுள்ளேனா என்றால் இல்லை, படித்துள்ளேன்.
மேற்படி சட்டம் 2008 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் திருத்தம் செய்யப்பட்டு அமலுக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி யுஏபிஏ சட்டத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கும், தனி நபர் குழுக்கள் பயங்கரவாதத்திற்கும் உள்ள வித்தியாசம் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சதி செய்வது இரண்டுக்கும் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஆட்கள் சேர்ந்தால்தான் சதி என்றால் சரிதான். நான் பணியாற்றிய காவல் நிலையத்தில் ஆய்வாளருக்கு உட்பட்டிருக்கும் ஒரு போலீஸ்

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.03 16:59:40 +0530

அதிகாரி என்றாலும் அதனால் எனக்கு தனியாக விசாரிப்பதற்கு ஆய்வாளரோ அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளரோ உத்தரவிட வேண்டும் அதன் அடிப்படையில் தான் நான் விசாரிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாக்கெட் நோட்டு உள்ளது என்றால் உண்டு. மேற்படி பாக்கெட் நோட்டில் 26.7.2022ஆம் தேதி நிகழ்வு பற்றி நான் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். எனது காவல் நிலையத்திலிருந்து முனியப்பன் கோவில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எனக்கு தகவல் கிடைத்து நான் எத்தனை மணிக்கு எந்த வாகனத்தில் யார் யாரோடு சென்றேன் என்றால் எனது வாகனத்தில் ஆறு மணிக்கு நான் மட்டுமே சென்றேன். நான் சென்று வாகனத்தின் பதிவு எண் TN 28 AA 5824 ஆகும். பெயர் சொல்ல முடியாத நபரை நான் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சுமார் 4:30 மணிக்கு விசாரித்தேன். மேற்படி பெயர் சொல்ல மறுத்த நபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் பெயரிலும் மற்றும் பெயர் சொல்ல மறுத்த நபர் கொடுத்த தகவலின் பேரிலும் தான் நான் புகார் கொடுத்தேன். பெயர் சொல்ல மறுத்த நபர் கொடுத்த தகவல் மற்றும் ரகசிய தகவலாளி கொடுத்த தகவல் ஆகியவற்றின் ஜிடிஎன்ட்ரி நான் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். ஒரு நபர் பெயர் விவரம் சொல்ல மறுத்தால் அதுவே ஒரு குற்றம் என்றால் சரிதான். பெயர் சொல்ல மறுத்த நபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்த ஆய்வாளரிடம் நான் பெயர் சொல்ல மறுத்த நபரை காட்டி அவர்தான் தகவல் கொடுத்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு திரும்பி வந்தேன் என்றால் மாலை 6.15 மணிக்கு திரும்பி வந்தேன். நானே ஒரு காவல்துறை அதிகாரி என்பதால் நான் எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஸ்பெஷல் ரிப்போர்ட் தான் கொடுக்க முடியும் என்றாலும் புகார் கொடுக்க முடியாது என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டது அதை நான் பார்த்தேன். ஒரு cognizable offence நடைபெற்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக ஜிடியில் என்ட்ரி போட வேண்டும் என்றால் புகார் பெற்றவுடன் ஜிடியில் எண்ட்ரி போடப்படும். முதல் தகவல் அறிக்கையில் 15 காலத்தில் 3(c) காலத்தில் ஜிடி என்று எதுவும் இல்லாமல் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன கால நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நான் பெயர் கூற மறுத்த எந்த நபரையும் விசாரிக்கவில்லை என்றாலும் எந்த ரகசிய தகவலாளியும் எனக்கு எந்த தகவலும் தரவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஈரோட்டிலுள்ள சிறுபான்மை மக்களின் நன்மைக்காக அரசுக்கு எதிராக போராடக்கூடிய நபர் என்பதால் அவர் பிறப்பிலேயே ஒரு இஸ்லாமியர் என்பதாலும் அவருக்கு எதிராக திட்டமிட்டு இந்த பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. UAPA சட்டத்தை தவறான முறையில்

SAMEENA S
Digitally signed by SAMEENA S
Date: 2026.06.03 16:59:48 +0530

பயன்படுத்தி போடப்பட்ட  பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஐ எஸ் ஐ எஸ் இயக்கத்தோடு தொடர்பில் இருந்தார் என்றும் அவர் அதற்காக  கொடி கத்தி ஆகியவை வீட்டில் வைத்திருந்தார் என்று சொல்வதும் எதிரி மீது வேண்டுமென்றே கூறப்பட்ட ஒரு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.   ஒரு பிடிக்கக்கூடிய குற்றமாக இருந்தால் காவல்துறை அல்லாத தனிநபர் கூட கைது செய்யலாம் என்றால் சரிதான்.   எதிரி நான் சொல்வது போல் கொடி கத்தி ஆகியவற்றை வீட்டில் வைத்திருந்தால் அவரை நான்  கைது செய்யவும் பொருட்களை கைப்பற்றுவதிலும் எந்த தடையும் எனக்கு இல்லை என்றால் சரிதான்.  இது முற்றிலும் ஒரு பொய் வழக்கு என்றாலும் ஆய்வாளர் என்னை எந்த சமயத்திலும் விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.03 16:59:57 +0530

Principal District and Sessions Judge,
Erode.